# மகிழ்ச்சி

**MAGIZHCHI MAGAZINE**

**NOVEMBER 2025**



## நன்மை அளிக்கும் ஆண்டவர்

C.S.I. TAMIL CHURCH SHARJAH
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

இதோ, அவர் மேகங்களோடே வருகிறார்,
ஒவ்வொரு கண்ணும் அவரைக் காணும். வெளிப்படுத்தல் 1:7

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

**CSI தமிழ் திருச்சபை** ஷார்ஜா
நடத்தும்

அட்வன்ட் கண்வெஷன் கூட்டங்கள்-2025

# இதோ, அவர் வருகிறார்

## (BEHOLD, HE COMES!)

(வெளிப்படுத்தல் நூலை அடிப்படையாகக் கொண்ட ஆழமான
ஆன்மீக சிந்தனைகள்

நவம்பர் 2025

**27** வியாழக்கிழமை
**28** வெள்ளிகிழமை
**29** சனிக்கிழமை

தினமும் மாலை 8.00 மணிக்கு

**இடம் :**
**மார்ட்டின் ஆலயம்**
ஷார்ஜா

- உற்சாகமூட்டும் பாடல்கள்
- உள்ளார்ந்த ஆராதனை
- வெளிப்படுத்தல் நூலின் ஆழத்தையும் அழகையும் அனுபவிக்க குடும்பமாய் வருக.

குறிப்பு:
டிசம்பர் 2-ஆம் தேதி
காலை 10.00 மணிமுதல்
1.00 மணிவரை
**குடும்ப கூடுகை நடைபெறும்**



அன்புடன் அழைக்கும்
**Rev.A.F.ஆமோஸ் இலாசரஸ்**
ஆயர் C.S.I தமிழ் திருச்சபை, ஷார்ஜா.

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 4 |
| செயலர் மடல் | 12 |
| திருமறைத் தியானம் | 15 |
| God who Grants Goodness | 19 |
| இனிய இல்லறம் | 21 |
| Church History | 24 |
| திருமறையைத் தெரிந்துகொள்வோம் | 27 |
| Kids Corner | 29 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 31 |
| Daily Bible Reading | 33 |
| வழிபாட்டுத் தியானப் பொருள் | 34 |



# From the Presbyter's Desk

ஆயாரிடமிருந்து…

"நன்மை அளிக்கும் ஆண்டவர்" (சங்கீதம் 85:12 )

கிறிஸ்துவில் மிகவும் அன்புக்குரியோரே,

நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் தங்களிலே அருளும் அமைதியும் பெருகுவனவாக.

விலைமதிக்கமுடியாத கடந்துபோன பத்து மாதங்களாக நம்மைக் கண்ணின் மணியைப் போல் காத்த ஆண்டவர் இந்த ஆண்டின் பதினோராம் மாதத்துக்குள் மிகச் சிறப்பாய் அழைத்து வந்துள்ளார். நவம்பர் மாதம் நன்மையின் மாதம், நன்றி செலுத்தும் மாதம், நமது அறுவடை பண்டிகையின் மாதம். இந்த ஆண்டின் நிறைவுப் பகுதியில் வந்துள்ள நாம் வருத்தத்தோடன்று நன்றி நிறைந்த நெஞ்சத்தோடு நடந்து வந்த வழியைத் திரும்பிப் பார்ப்போம். மலைகள் வழியாகவும் பள்ளத்தாக்குகள் வழியே வேதனைகளின் வழியே வெற்றிகளின் வழியே அழைத்து வந்த ஆண்டவர் நன்றியின் பாடல்களைப்பாடி போற்றுதல் நிறைந்த உள்ளத்துடன் புதிய மாதத்துக்குள் அடியெடுத்து வைக்க அழைக்கின்றார்.

சங்கீதப் பாடலாசிரியர் கூறுவது போல நாமும் துணிந்து கூறுவோம்.

“கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.”

## மறுசிரமைப்பின் மாதம்

உண்மையிலேயே அக்டோபர் மாதம் மறு சீரமைப்பின் மாதம்தான்! ‘கூகுள் மீட்டில்’ வழியாக அக்டோபர் முதல்நாள் வாக்குதத்த வழிபாடு நடைபெற்றது. இத் திரு வழிபாட்டில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். மூன்று மாதங்களுக்கு முன் ஐம்பது பேர் கலந்து கொண்ட நிலையில் இது மிகப்பெரும் வளர்ச்சிதான்! வாக்குத்தத்த வார்த்தைக்கு ஏற்ப ‘நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய இராணுவமான வெட்டுக்கிளிகள் தின்ற வருஷங்களை நான் உங்களுக்குத் திரும்பத் தருவேன்’ என்று கடவுள் கூறுகிறார்.’ (யோவேல் 2:25) நம்மிடையே மீண்டும் உண்மையாகியுள்ளது. ஆண்டவர் உண்மையாகவே நாம் கூடி வருதலின் எண்ணிக்கையைப் பெருக்கி நம் கூட்டுறவை வாழ்த்தியுள்ளார். ‘கூகுள் மீட்டை’ திறம்பட மேற்பார்வை செய்த திருமிகு ஏரென் அகஸ்டின் ஐயாவுக்கு உள்ளத்திலிருந்து நன்றி கூறுகின்றேன்.

## வளரும் ஒளிரும் நம் திருச்சபை :

நாம் ஆண்டவரின் நாளிலே கூடிவந்து அவரைத் தொழுதிடும்நாள் தொடர்ந்து நமக்கு வாழ்த்துதலின் ஊற்றாகவே அமைந்துள்ளது. வாரந்தோறும் ஞாயிற்றுகிழமையில் ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்திட நானூறு பேர் கூடிவருகின்றோம். ஒவ்வொரு வாரமும் குறைந்தது ஐந்து குடும்பத்தினராவது புதிதாக வருகின்றனர். ஆ இது ஆண்டவரின் விரிவாக்கும் அருளுக்குச் சான்றாகவல்லவா திகழ்கின்றது!

முதல் வாரத்தில், ‘இறை மக்கள் யாவரும் குருக்களே’ என்கின்ற தலைப்பின் கீழ் இறை மொழி கேட்டோம். இது ஆண்டவர் மீது மாறா நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரையும் எவ்வாறு ஆண்டவர் தம் அருள்பணி ஆற்றிட அழைக்கின்றார் என்று அறிந்தோம்.

இரண்டாவது வாரத்தில் மாற்றுத் திரனுடையோருக்குரிய ஞாயிறு. ‘இயலாதோரைப் பேணுதலும் மாண்பளித்தலும்’ என்ற பொருளின் கீழ் இறை மொழி கேட்டோம். ஒவ்வொருவரிலுமுள்ள இறைச் சாயலைக் காண்பது எவ்வாறு என்று நமக்குக் கனிவுடன் நினைவூட்டி அறிந்தோம்.

மூன்றாவது வாரம், மகிழ்ச்சியான இளையோர் ஞாயிறு. இந்த நாளில் ‘கிறிஸ்துவுடன் செயல்படும் இளையோர்’ என்ற தலைப்பின் கீழ் இறை



மொழி கேட்டோம். அந்த நாளில் நம் இளையோர் மிகுந்த ஈடுபாட்டுடன் பாடல்கள் பாடி நடித்துக்காட்டி அருள் செய்தியைப் பகிர்ந்து கொண்டனர். வெளி நாடுகளிலிருந்தும் இயங்கலை வழியாக இளையோர் பங்கேற்றது உள்ளத்தை உவகையால் நிரப்பியது.

நிறைவு வாரம் “கடவுளின் இறையாண்மை நீதி ஆகியவற்றைக் கொண்டாடுதல்” என்ற பொருளின் கீழ் இறை மொழி கேட்டோம். இவ்வுலகில் இறையாளுகையின் கருவிகளாக நாம் வாழ்வதற்குக் கடவுளருளும் அழைப்பைக் குறித்து அறிந்தோம்.

## மன்றாடும் திருச்சபை

இருபத்து நான்கு மணிநேர தொடர் இறைவேண்டல் அக்டோபர் மூன்றாம் நாள் இரவு பதினோரு மணிக்குத் தொடங்கி அக்டோபர் நான்காம் நாள் இரவு பதினோரு மணிவரை நீடித்தது. நூற்றுக்கும் மேற்பட்டோர் மிகுந்த ஒப்படைப்புடன் இந்த இடையீட்டு மன்றாட்டில் கலந்து கொண்டனர்.

அக்டோபர் பத்தாம் நாள் முன் இரவு இறை வேண்டுதல் நடைபெற்றது சென்னையிலிருந்து நற்செய்திப் பணியாளர் திருமிகு. கிறிஸ்பஸ் செல்லதுரை செய்தியளித்துத் திருப்பணிக்குச் செறிவூட்டினார். இவர்தம் உள்ளத்தை உருக்கும் செய்தியும் புகழ் பெற்ற பாடலுமான "உங்க பிரசன்னத்தில் அளவில்லாமல்" என்ற பாடலும் ஆண்டவருடன் கிட்டிச் சேர்ந்திட உதவின.

அக்டோபர் பதினெட்டு உபவாச ஜெபம் நிகழ்ந்தது "வனாந்தரத்தின் வழித்தடம்" என்ற தலைப்பில் தொடர்ந்து சிந்தித்து வருகின்றோம். இந்த முறை யாக்கோபின் வாழ்வினைக் குவியப் படுத்தினோம். உடைந்து போன நிலையிலிருந்து உருப்பெற்ற நிலைக்கு அவர் உயர்த்தப் பெற்றதை உணர்ந்தோம். இந்த ஒன்றித்த இறைவேண்டல் நேரத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

துபாய், மூவ்வேலா, அல் மஜாஸ் ஆகிய இடங்களிலுள்ள "PRAYER CELL" இம் மாதத்தில் நன்கு வலுப்பெற்றுள்ளது. ஒவவ்வொரு திசையிலும் கூட்டுறவு உறுதியடைந்துள்ளது.

## நன்மைக்கும் நன்றிக்குமான காலம் :

நவம்பர் மாதத்துக்குள் நம்பிக்கையுடன் அடியெடுத்து வைக்கின்றோம். இது நன்மையின் மாதம் அறுவடையின் மாதம். உள்ளமெல்லாம் மகிழ்ச்சி பொங்க எண்பது வீடுகளுக்குச் சென்று அறுவடைப் பெறுநாள் கொண்டாட்டத்தில் பங்கேற்க அழைப்புக் கொடுத்தோம். அளவிட முடியாத அளவுக்கு நமக்கு வாழ்வளித்துள்ள ஆண்டவர்திருமுன நன்றி நிறைந்த மனத்துடன் கூடி வருவோம் நமது நன்றி காணிக்கைகளை ஆண்டவருக்கு என்று செலுத்துவோம்.

## இம்மாத நிகழ்வுகள்:

✧ அறுவடைப் பண்டிகை (HARVEST FESTIVAL) நமது வாழ்வில் ஆண்டவர் செயத நன்மைகளுக்கும், அளித்த ஈவுகளுக்கு குடும்பமாய் நன்றி செலுத்தும் பண்டிகை. குடும்பமாய் கலந்து அறுவடைப் பண்டிகையை

சிறப்பிக்க அக மகிழ்ச்சியோடு ஆண்டவர் திருமுன் கூடிவருவோம்.

✧ சிறுவர் திருச்சபை ஞாயிறு (JUNIOR CHURCH SUNDAY)- நவம்பர் 23 நம் திருச்சபையின் சிறியோர் வழிபாட்டை நடத்துவர்; நம் சிறு பிள்ளைகளை ஊக்கப்படுத்துவோம் வாழ்த்துவோம்.

✧ வருகையின் காலத்து நற்செய்தி கூட்டம் (ADVENT CONVENTION MEETINGS) நவம்பர் 27,28,29 (இரவு 8 மணி முதல் 10 மணிவரை) தூய பவுல் வழிபாட்டுமனையில் நடைபெறும்.

✧ வருகையின் கால குடும்ப புத்துணர்வுக் கூட்டம் (ADVENT FAMILY SUNDAY). டிசம்பர் 2 ஆம் நாள் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும், கிறிஸ்துவில் நாமனைவரும் ஒரே குடும்பத்தவராக நம் பற்றுறுதியையும், கூட்டுறவையும் புதுப்பிக்க ஒர் அழகிய வாய்ப்ப, தவறாமல் குடும்பமாய் கலந்திட அன்புடன் அழைகின்றோம்.

## நிறைவாக

அன்பிற்கினியவர்களே, இன்னொரு ஆண்டின் முடிவை நோக்கி நாம் பயணிக்கும் இந்நேரத்தில், நமது இதயங்கள் நன்றியால் நிறைந்து, நமது கைகள் சேவைக்காக நீளட்டும், நமது வாழ்வுகள் கிறிஸ்துவின் நறுமணத்தை வெளிப்படுத்தட்டும். அனைத்தையும் நமக்காக அருளிய ஆண்டவருக்காக நாமும் நமது சிறந்ததை அர்ப்பணிப்போமாக.



# From the Presbyter's Desk

"God Who Grants Goodness" - Psalm 85:12

Dearly Beloved in Christ,

Grace and peace to you in the name of our Lord and Saviour Jesus Christ!

The Lord who guarded us through ten precious months has graciously brought us into the eleventh month, the month of goodness and thanksgiving. As the year draws near its close, let us pause and look back-not with regret, but with gratitude. The God who led us through valleys and over mountains, through trials and triumphs, now calls us to enter this new month with songs of thanksgiving and hearts of praise.

Like the psalmist, we can boldly declare:

"The Lord will indeed give what is good,

and our land will yield its harvest." (Psalm 85:12)

**A Month of Restoration**

October was a month of restoration indeed! We began the month with our online service on October 1st via Google Meet. More than 100 participants joined in worship-a great leap from 50 just three months ago! Truly, God multiplies our gatherings and blesses our fellowship. I sincerely thank Mr. Aren Augustine for meticulously handling the online ministry. The promise verse, Joel 2:25 - "I will

restore to you the years that the locusts have eaten" - has come alive among us.

**The Church that Grows and Glows**

Our Sunday services continue to be a fountain of blessing. Each week, over 400 worshippers gather to praise the Lord, and at least five new families join us regularly. What a testimony to God's expanding grace!

- In the first week, we meditated on "The Priesthood of All Believers", being reminded that every believer is called to serve.

- The second week was our Sunday for the Differently Abled on the theme "Disability: Care and Honour" - a tender reminder to see God's image in every person.

- The third week brought the joy of Youth Sunday under the theme "Youth with Christ in Action." Our young people sang, acted, and preached with passion. Even those abroad joined online, filling our hearts with joy.

- The final week celebrated God's Sovereignty, Justice, and Peace, calling us to live as instruments of His Kingdom on earth.

**A Praying Church**

Our 24-hour chain prayer began on October 3rd at 11 PM and concluded on October 4th at 11 PM with more than 100 intercessors praying earnestly.

On October 10th, our night prayer was enriched by the ministry of Evangelist Crispus Chelladurai from Chennai. His heartfelt message and his famous song "Unga Prasanthathil Alavilamal" drew us closer to God's presence.

Our fasting prayer on October 18th continued the "Into the Wilderness" series, focusing on the life of Jacob-a journey of brokenness to blessing. Over 50 believers joined in united prayer.
Prayer cells flourished this month across Dubai, Muwaielah, and Al

Majaz, strengthening fellowship in every corner.

## A Season of Goodness and Gratitude

Now we step into November - the month of Goodness and Harvest. With hearts full of joy, we visited over 80 homes, inviting families to our Harvest Festival celebrations. Let us come together in thanksgiving, bringing our freewill offerings to the Lord who has blessed us beyond measure.

## Upcoming Events

· Harvest Festival - A time to celebrate God's abundance. Let us offer generously and participate joyfully.

· Junior Church Sunday - November 23rd - Our little ones will lead the worship; let us encourage and bless them.

· Advent Convention - November 27th, 28th, 29th (8 PM-9 PM) at St. Peter's Hall - Come and prepare your hearts for the coming of the Lord.

· Advent Family Retreat - December 2nd - A day to renew our faith and fellowship as one family in Christ from 10 am to 1 pm .

Beloved, as we journey toward the close of another year, may our hearts overflow with thanksgiving, our hands extend in service, and our lives reflect the fragrance of Christ. Let us give our best to the Lord who gave us His all.

**ஆண்டவரின் அருளும், ஆசியும் உங்கள் அனைவரோடு இருப்பனவாக!**

**இறைமக்கள் திருபணியில்**

**உங்கள் ஆயர்**

அருள்திரு.**ஆ.பி.ஆமோஸ் இலாசரஸ்**



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில், உங்கள் அனைவருக்கும், அன்பின் வாழ்த்துதலைத், தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த செப்டம்பர் மாதம் முழுவதும், நம்மையும் நம் குடும்பத்தினரையும், செவ்வனே பாதுகாத்து, இந்தப்புதிய அக்டோபர் மாதத்தைக் காண கிருபை செய்ததற்காக, ஆண்டவருக்கு நன்றிகளையும், துதிகளையும் ஏறெடுக்கிறேன்.

கடந்த மாதம் முழுவதும் நமது சபையின் நிகழ்வுகள் அனைத்தையும், நேர்த்தியும் கிரமமுமாக நடத்த கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பாக எல்லா வியாழன் இரவுகளிலும் நமது சபையின் முகாம் சகோதரர்களைச் சந்திக்க, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, தவறாமல் சென்று வருகிற சகோதரர்களுக்காக, ஆண்டவரைத் துதிக்கிறோம். சமயம் வாய்க்கும் போது, தங்களால் இயன்றவர்கள் இந்த ஊழியத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும்படி அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சில வருட இடைவெளிக்குப் பின்பு, கடந்த மாதத்திலிருந்து நமது சபையின், 'Cell Group Meetings', தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கான சிறப்பான முயற்சிகளை, கீழே கொடுக்கப்பட்டுள்ள நமது ஏழு செல் குரூப்பின் தலைவர்கள் எடுத்தார்கள், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏழு செல் குரூப் களில், சபையினர், தங்கள் வசிப்பிடத்தின் பகுதியை வைத்து, அந்தப் பகுதியில் உள்ள செல் குரூப் லீடரை தொடர்பு கொண்டு, தொடர்ந்து தங்கள் குடும்பத்தில் ஆண்டவர் கிருபையாய் அருளிச் செய்யும், ஆசீர்வாதங்களுக்காகவும், சுக பலனுக்காகவும், பிறந்தநாள், திருமணநாள் மற்றும் பல்வேறு மகிழ்ச்சியான

தருணங்களுக்காகவும் ஆண்டவருக்கு நன்றியைச் செலுத்தும் விதமாக 'Cell' குரூப் 'Meetings' நடத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

| CSI- TAMIL CHURCH, SHARJAH.- PRAYER CELL DETAILS | | | |
|---|---|---|---|
| # | PRAYER CELL- AREA | LEADER NAME | CONTACT # |
| 1 | ABU SHAGHARA | Bro. Samuel Sathya | 050 7868755 |
| 2 | AJMAN | Bro. Reuban Nallathambi | 056 2044580 |
| 3 | AL NAHDA - SHARJAH | Bro. Jebasingh | 056 5471343 |
| 4 | AL QASMIA | Bro. Paul Deniser | 056 9544376 |
| 5 | DUBAI | Br. Rajesh Kumar | 050 7287967 |
| 6 | ROLLA & AL QASMIA-1 | Bro. Sathish Rajkumar | 050 4757112 |
| 7 | NATIONAL PAINT & MUWEILAH | Bro. Abil Qubilius | 505184254 |

தொடர்ந்து அறிவிப்புகளில். தெரிவித்தபடி நமது சபையின் தகவல் தரவுகளில், சபையாரும் அவர்களின் குடும்பத்தினரும் பிறந்தநாள், திருமண நாள் குறித்துச் சரியான முறையில், பதிவுசெய்து சபை ஆராதனைகளில் அவற்றை நினைவு கூர்ந்து ஜெபிப்பதும். மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே சபையர் மேலே குறிப்பிட்ட தகவல்களைப் பகிர்வதற்காக, 'வாட்ஸ் அப்பில்' பதிவேற்றம் செய்யப்பட்ட கூகுள் பார்மையோ, அல்லது திருச்சபையில் வைக்கப்படும் படிவங்களையோ, பூர்த்தி செய்து, விரைவில் திருப்பித் தருமாறு, அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது சபையின் 'ஜூனியர் சர்ச்' வகுப்புகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சபையர் தங்கள் பிள்ளைகளை ஜூனியர் சர்ச்சுக்கு தவறாமல் அனுப்பி பிள்ளைகளை கர்த்தருடைய போதனைகளில் நடத்த உதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். இந்த வாரம் நடைபெற்ற மனப்பாட வசனம் ஒப்புவித்தல் நிகழ்ச்சியில், ஒன்று முதல் ஏழு சங்கீதங்களை, சுமார் 75 பிள்ளைகள், மனப்பாடம் செய்து ஒப்புவித்ததற்காக கர்த்தரை துதிக்கிறோம். கர்த்தர் தாமே இந்த பிள்ளைகளையும், இதற்காக முயற்சி எடுத்த பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், ஆசீர்வதிப்பாராக. வருகிற நவம்பர் 23 ஆம் தேதி நமது பிள்ளைகள், ஆலய ஆராதனை நடத்துவதில் பங்கு பெற்று தங்கள் சிறப்பு நிகழ்ச்சியை அளிக்க வருகிறார்கள் இதற்காக சபையர் ஜெபித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

19/10/2025 ஆராதனையில் பங்கு எடுத்து சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கிய நமது ஆலய youth wingகாக கர்த்தரை துதிக்கிறோம். நமது சபையின் வாலிபர் ஐக்கிய குழுவை சிறப்பாக நடத்தி வரும் திரு Manoj Abraham மற்றும்

Mrs.Esther Manoj ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். வரும் நாட்களில் அவர்கள் நமது சபையின் வாலிபர்களை மூன்று பிரிவுகளாக பிரித்து அதாவது முறையே

1. ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிப்பவர்கள்.

2. நமது சபையின் ஹிகிணில் கல்வி பயின்று வரும், மற்றும் வேலை பார்க்கும் வாலிபர்கள்.

3. வெளிநாடுகளில் கல்வி பயின்று வரும், நமது சபையின் வாலிபப் பிள்ளைகள்.

அவர்களுக்காக வலைதள மற்றும். நேர்முகப் பயிற்சிகள் நடத்த இருக்கிறார்கள். அதற்கான விவரங்கள் கூடிய விரைவில் நமது சபையின் 'whatsapp' தளங்களில் பகிரப்படும். இதனைக் குறித்த மேல் விபரங்கள் தேவைப்படுவோர் திரு. Manoj Abraham (056 2318381) அல்லது திருமதி Esther Abraham அவர்களை அணுகுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அக்டோபர் 2025 ஆம், மாதம் நமது ஆலய பெண்கள் சங்கத்தினர் நமது ஆயர்அம்மா, தலைமையில், இரண்டு BABY Shower நிகழ்வுகளைச் சிறப்பாகச் செய்துள்ளனர், இதற்காக கர்த்தரை துதிக்கிறோம். .

எதிர்வரும் நமது சபையின் அறுவடை பண்டிகைக்காக சபையர் தொடர்ந்து ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். பண்டிகையை சிறப்பாக நடத்துவதற்கு எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

மேலும் இந்தப் புதிய நவம்பர் 2025 மாதத்தையும் கர்த்தர் நமது சபையினருக்கு, ஆசிர்வாதமான மாதமாக அருளிச் செய்வாராக. ஆமென்.



# நன்மை அளிக்கும் ஆண்டவர்

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த இறைமக்களே,

நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்தும் வணக்கமும். ஆண்டவரின் அருளினால் இந்த ஆண்டின் பத்து மாதங்களை மகிழ்ச்சியுடன் கடந்து வந்துள்ளோம். அறைகூவவல்கள் எழுந்த வேளையில் நம்மைச் சுமந்தவர் தம் இரக்கத்தினால் நம்மைத் தற்காத்தவர், நம் இல்லங்களைத் தம் அமைதியினால் நிரப்பியவர், இந்தப் பதினோராம் மாதத்திற்குள்ளும் அழைத்து வந்துள்ளார். இந்த மாதம் நன்றி செலுத்தும் மாதம் மட்டுமன்று அறுவடை பண்டிகையின் மாதமும் கூட. தம் கண்ணின் கருவிழியைப்போல நம்மைக் காத்திருக்கின்ற ஆண்டவருக்குச் சற்றே கருத்தூன்றி நன்றி செலுத்துவோம். நாம் வாழ்ந்திருப்பதும் ஒன்றிணைந்து தொழுவதும் அறுவடையின் மற்றுமொரு பருவத்தைக் காண்பதுமே கடவுளின் கை நெகிழாத நன்மைத்தன்மைக்குரிய சான்றுகளே.

ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்த என்னுள்ளத்தில் இந்தத் மாதத்திற்குரிய இறைத் திருமொழியாக தோன்றியது

‘கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.’ ( சங்கீதம் 85:12)

இந்தத் திருமொழி வயல்வெளி விளைச்சலைப் பற்றி மட்டும் சொல்லவில்லை ஒருபோதும் வற்றிப்போகாத கடவுளின் நம்பகத் தன்மையைக் குறித்ததும் கூறுகின்றது. அவர் நன்மையை வழங்கும் கடவுள், அவரது திருகரம் நம் ‘நிலமான’ நமது குடும்பத்தாரை, நம் வேலையை, நம் அருள் பணியைத் தொடும் போது பன்மடங்காக அவை பயனைத் தரும்.

## குறைவுகளின் காலத்தில் ஆண்டவர் தரும் நன்மை

1 இராஜாக்கள் 17:8 முதல் 16 வரையுள்ள பகுதியில் நாம் ஒரு நிகழ்ச்சியைக்

குறித்துப் பார்க்கின்றோம். பஞ்சமும் வறட்சியும் நெருங்கிய சூழலில் சாரிபாத்து என்கின்ற ஊரில் கைம்பெண் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரிடத்தில் கிட்டத் தட்ட ஒன்றுமேயில்லை. கைப்பிடியளவு மாவும், மிகச் சிறிதளவு எண்ணெய் மட்டுமே இருந்தன. இறைவாக்கினர் எலியா அப்பெண்மணியினுடைய வீட்டின் கதவைத் தட்டிய வேளையில், தமக்கும் தம் மகனுக்கும் கடைசியாக உணவை ஆயத்தம் செய்யும் மன நிலையில் இருந்தார்.

**இப்படிப்பட்ட சூழலிலிருந்தவரிடம் இறைவாக்கினர்**

முதலில் எனக்கு ஒரு சிறிய அப்பம் சுட்டுக் கொண்டுவா பிறகு உனக்கும் உன் மகனுக்கும் சுட்டுக்கொள் என்று சொன்னது பொருளற்றதாகத்தான் தோன்றுகின்றது. ஆனால் அச்சொற்களுக்குள்ளே தெய்விக ஆசீர்வாதம் இருந்தது. முதலாவதாக கடவுளுக்கு நாம் ஒன்றைக் கொடுக்கும் போது அளவிட முடியாத வகையில் அவர் நம்மை ஆசீர்வதிபார். அந்தக் கைம்பெண் கீழ்ப்படிந்த போது வியப்பான செயலொன்று நிகழ்ந்தது. 'பானையிலிருந்த மாவு தீரவில்லை; கலையத்திலிருந்த எண்ணெயும் குறையவில்லை.'

அன்பானவர்களே, இது ஒரு அதிசயக் நிகழ்வு மட்டுமல்ல இது அறுவடைச் சித்தாந்தம். நம்மிடத்தில் எது இல்லையோ அதனை ஆண்டவர் கேட்பதில்லை. நம்மிடத்தில் எதுவுண்டோ அதனையே அவர் கேட்பார். அது எவ்வளவு சிறியது என்றாலும் அர்ப்பணிக்கும்படி கேட்பார், அர்ப்பணிக்கும் பொழுது அதனை அவர் பெருகிடச் செய்வார்.

அறுவடைக் கோட்பாடு கடவுளுக்கென்று கொடுத்திடுக அவரின் நன்மையைக் காண்பீர்

சாரிபாத்துப் பெண்மணியின் செயல் அவர் இல்லத்தின் மீது இறையவரின் இனிய ஆசிர்வாதங்களை பொழிந்திடச் செய்தது.

இது போலவே முதற்பலன் கணியின் காணிக்கை, ஒரு நாள் ஊதியம் காணிக்கையை அறுவடை பண்டிகைக்கு கொண்டுவரும் போது 'ஆண்டவரே நீரே என் ஆதாரம். என்னிடமுள்ளவையெல்லாம் உம்மிடமிருந்து நான் பெற்றவை' என்பதை அறிக்கையிடுகின்றோம்.

கடவுள் மீது நம்பிக்கை வைத்துக் கொடுப்போரை அவர் ஆசீர்வதிகின்றார். உலகமோ நாம் வைத்திருப்பதை நமக்கென்று இறுகப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டுமன்று கற்பிக்கின்றது.

இறையாளுகையோ நம் கைகளை பிறருக்காக திறந்திட வேண்டுமென்று கற்பிக்கின்றது. திறந்த கைகள் தாம் இறை ஆசீர்வாதத்தை பெற்றிட முடியும்.

## செழிப்பு இறையியல் விட நன்மை இறையியல் மேலானது

கர்த்தர் நன்மையானதைத் தருவார் (சங்கீதம் 85:12) வரியில் இடம் பெற்றிருக்கும் லதீ (கஒ  என்பதன் பொருள் பொறைமை, பலனளிக்கும் நன்மை, தெய்வத்தின் கனிவுப் பார்வை என்பன. கர்த்தர் நன்மையானதைத் தருவார் என்பது நிலத்தின் விளைச்சலைப் பற்றி மட்டும் அது குறிப்பதில்லை, நம் இல்லங்களில் அவர் தரும் அமைதி, திருச்சபையில் அவர் தரும் ஒருமைப்பாடு, நமது வேலையில் ஆசீர்வாதம், ஊழியத்தில் வளர்ச்சி இவற்றையும் குறிக்கும். நிலத்தில் மட்டும் அறுவடை என்பதில்லை இதயத்திலும் என்பதுதான் உண்மை. நன்றியுணர்வு பெருகும் போது, கீழ்ப்படிதல் மலரும் போது, பற்றுறுதி கனிதரும் போதுதான் அறுவடையை பண்டிகை மேலானதாக இருக்கும்.

HATTIE MAY WIATT : TRUE HISTORY BEHIND THE “57 CENTS” STORY

## ஹாட்டி மே வியாட்டின் 57 காசுகளின் வரலாறு

(அமெரிக்காவின் பிலடெல்பியா நகரத்தில் நடந்த உண்மைக் கதை)

1800களின் இறுதியில், ஹாட்டி மே வியாட் என்ற சிறுமி பிலடெல்பியாவில் உள்ள டெம்பிள் பேப்டிஸ்ட் தேவாலயத்தின் அருகில் வாழ்ந்தாள். அவள் வயது வெறும் ஆறு. அந்த தேவாலயத்தின் ஞாயிறு பள்ளி மிகச் சிறிய அறையில் நடைபெற்றது. குழந்தைகள் நிறைய வந்ததால், பலரை உள்ளே அனுமதிக்க முடியவில்லை.

ஒருநாள், ஹாட்டி தேவாலயத்துக்கு வந்தபோது, “அறை நிரம்பி விட்டது” என்று கூறி அவளை நிறுத்தினர். அப்போது தேவாலயத்தின் ஆயர் ரஸ்ஸல் ஹெச். கான்வெல் அவளை கவனித்தார். அவர் அவளை தூக்கி உள்ளே கூட்டி வந்தார், ஒரு இடத்தில் உட்கார வைத்தார். பின்னர் புன்னகையுடன் சொன்னார்:

“ஒருநாள், ஹாட்டி, இந்தக் கிராமத்தில் எல்லா குழந்தைகளும் வரக்கூடிய பெரிய ஞாயிற்று பள்ளி நாம கட்டுவோம்.”

இந்த வார்த்தை அந்த சிறுமியின் இதயத்தில் பதிந்தது.இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஹாட்டி நோயுற்று மரணமடைந்தாள். அவளுடைய அம்மா அவளுடைய பொருட்களை சுத்தம் செய்தபோது, ஒரு சிறிய பணப்பையை தலையணையின் கீழ் கண்டாள். அதன் உள்ளே 57 காசுகள் இருந்தன அதோடு ஒரு சிறு குறிப்பு :

**“பெரிய தேவாலயத்தைக் கட்ட உதவ இதை வைத்திருக்கிறேன்.”**

ஆயர் கான்வெல் இதைக் கேட்டதும் ஆழமாக மனம் நெகிழ்ந்தார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை, தேவாலயத்தில் ஹாட்டியின் கதையை சொன்னார். அந்தச் சிறுமியின் அன்பு மக்களின் இதயத்தைத் தொட்டது. ஒருவர் நிலம் கொடுத்தார், பலர் தங்களால் இயன்றதைச் செய்தார்கள். அந்த 57 காசுகள், இறைவரின் ஆசீர்வாதத்தால், $250,000 ஆக வளர்ந்தது இன்று கோடிகளில் மதிப்புடையது! அந்தப் பணத்தால் அவர்கள் Temple Baptist Church, Temple University, மற்றும் Temple Hospital ஆகியவற்றை அமைத்தனர். இன்றும் அந்த பல்கலைக்கழகத்தில் ஹாட்டியின் 57 காசுகள் ஒரு பெட்டிக்குள் நினைவாக வைக்கப்பட்டிருக்கின்றன. “Little Is Much When God Is in It “

ஹாட்டியின் 57 காசுகள் நமக்குக் கற்றுத்தருவது தேவனுக்கு கொடுக்கும் எந்தச் சிறிய அர்ப்பணிப்பும் வீணாகாது.

நம் அன்பு கலந்த கொடையைக் கடவுள் பெருக்கி, தலைமுறைகளுக்கு ஆசீர்வாதமாக மாற்றுவார்.

அன்புக்குரியோரே, தென்னிந்தியத் திருச்சபை ஷார்ஜா தமிழ் இறைமக்கள் அறுவடைத் திருநாளினைக் கொண்டாடும் வேளையில் நன்றிப் பெருக்கான நெஞ்சத்துடன் நம் திருப்பணிக் கொடைகளைக் கொண்டு வருவோம்.

இந்த ஆண்டில் நமக்கு ஏற்பட்ட இழப்புகளை எண்ணிப்பார்க்க வேண்டாம். நம்மிடத்தில் இன்னும் உள்ளவைக்காகவும் இனிமேலும் பெறவிருப்பவைக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். சாரிபாத்துப் பெண்மணியுடன் சேர்ந்து ‘என்னிடமுள்ள சிறியவற்றிலிருந்து ஆண்டவரே உமக்கு முதலாவது தருகின்றேன். ஏனெனில் என் பானை ஒருபோதும் வற்றிப் போகாது என்று நம்புகின்றேன்’ என்று சொல்லிடக் கற்றுக் கொள்வோம்.

**இந்தக் காலம் கொடுப்பதைக் கொண்டாடும் காலமாகட்டும்.**

கட்டாயப் படுத்துவதினாலல்ல நன்றி நிறைந்த நெஞ்சத்துடன் கொடுப்போம். நன்றிப் பெருக்குடன் விதைத்தால் அகக்களிப்புடன் அறுவடை செய்வோம் என்பதில் ஐயமில்லை.

ஆண்டவரே என்னிடமுள்ள குறைவானதை, என் நேரத்தை , என் திறன்களை, என் செல்வத்தைக் கொண்டு வந்திருக்கின்றேன். ஏற்றுக் கொள்வீராக ஆசீர்வதித்து, என் வழியாய் உம் நன்மை வழிந்தோடச் செய்வீராக.அமென்

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# God Who Grants Goodness

God is a generous giver. His nature is to bless, restore, and renew. When hearts turn to Him, when faith replaces fear, His favor begins to flow again causing even barren lands to yield fruit and dry souls to come alive.

“The Lord will indeed give what is good, and our land will yield its harvest.” Psalm 85:12

This verse speaks of both spiritual and physical abundance. God’s goodness is not limited to material blessings it includes peace, mercy, forgiveness, and joy that comes from walking in His ways. When God gives, He gives abundantly, and His blessings overflow into every part of our lives.

“Every good and perfect gift is from above, coming down from the Father of the heavenly lights.” James 1:17

Even when seasons of drought come times of waiting, loss, or pain God is still faithful. His goodness may seem hidden, but it is never absent. Just as rain restores the earth, His grace restores the soul.

“You crown the year with Your goodness, and Your paths drip with abundance.” Psalm 65:11

When we seek God earnestly, aligning our hearts with His will, He opens the windows of heaven. Goodness flows not only into our lives but also through us to our families, communities, and workplaces. We become instruments of His generosity.

“Taste and see that the Lord is good; blessed is the one who takes refuge in Him.” Psalm 34:8

The land yielding its harvest symbolizes fruitfulness, spiritual growth, answered prayers, restored relationships, and renewed hope. God’s goodness transforms the wilderness into a garden and turns mourning into dancing.

Sometimes, we may look around and see dryness or struggle, but this verse reminds us: the Lord will indeed give what is good. Not “might,” but “will.” His timing may differ from ours, yet His promise stands unshaken.

“No good thing does He withhold from those whose walk is blameless.” Psalm 84:11

In our daily lives, we experience His goodness through answered prayers, protection from unseen dangers, and strength in times of weakness. God’s goodness is not always about material wealth it is about His presence that gives peace beyond understanding.

“The Lord is good, a refuge in times of trouble. He cares for those who trust in Him.” Nahum 1:7.

Let us always with thankful hearts enjoy the goodness of our Lord who is walking ahead of us and giving us that is best and perfect.

Contributed by
Mrs.Nancy Augustine



# வயதுவந்த வாழ்க்கைக்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்

**நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார்.** (நீதி 22:6).

## நிபந்தனையற்ற அன்பு (Unconditional Love) :

உங்கள் பிள்ளைகளின் திறமையை இரசியுங்கள். அவர்களுடைய ஒழுக்கத்தைப் பாராட்டுங்கள். உங்களுடைய சொற்படி நடந்தால் மகிழுங்கள். ஆனால் அவர்களிடம் அன்பு செலுத்துவதற்கு இவைகள் காரணிகளாக இருத்தலாகாது. பிள்ளைகளிடம், அவர்கள் இருக்கிறவண்ணமாகவே அவர்கள்மீது அன்பு செலுத்துங்கள். (A child is not to be loved primarily for what he or she does or doesn't do, but to be loved for who he or she is).

## போதுமான உரிமை (Sufficient Freedom):

பிள்ளைகள் இயந்திரங்களுமல்ல, அடிமைகளுமல்ல. அவர்களுடைய உண்மையான ஆளுமைத் திறன் (unique personality) வெளிப்படவேண்டுமென்றால் பிள்ளைகளுக்குப் போதுமான சுதந்திரம் தேவை. அவர்களே சில முடிவுகளெடுக்கப் பயிற்சிகள் கொடுங்கள். அதனால் ஏற்படும் சாதகபாதக விளைவுகளைச் சந்திக்கவும் தயாராகும் மன நிலையை அவர்களில் உருவாக்குங்கள்.

## உறுதியான ஒழுக்கப்பயிற்சி (Firm Discipline)

எல்லாத் துறைகளிலும் பிள்ளைக்கு ஒழுக்கத்தைப் பயிற்றுவிக்க (Discipline is the training of a child in every area of life). காலையில்

எழுவது முதல் இரவு துயிலச் செல்லும் வரையிலான அனைத்திலும் ஒழுக்கம் கற்பிக்கப்படவேண்டும். உரிமையை அனுமதிப்பது ஒழுக்கமின்றி இருப்பதற்காக அல்ல.

## இலக்கை நிர்ணயிக்க ஆலோசனை (Goal Setting)

பிள்ளைகளுடைய தனித்துவத் திறமைகளைக் கண்டறிந்து அதை வளர்த்துக்கொள்ள உதவுங்கள்; அதற்கேற்ப, அவர்களுடைய. வாழ்க்கையின் இலக்கைத் தெரிவு செய்யவும், நிர்ணயிக்கவும் ஆலோசனை கூறுங்கள்.

தன்னம்பிக்கையற்றவர்களும், தாழ்வு மனப்பான்மையுள்ள வர்களும், சோம்பேறிகளும், தோல்வி கண்டு அஞ்சுகிறவர்களுமே இலக்கைத் தெரிவுசெய்யத் தயங்குகிறவர்கள். இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த சராசரி மனிதராக இருக்கக் கூடாது என்பதை உங்கள் பிள்ளைகளின் மனதில் பதியவையுங்கள்.

உங்களுடைய உற்சாகமூட்டுதலே. உங்களுடைய பிள்ளைகளை இலக்கை நோக்கி வழிநடக்கச் செய்யும் உந்து சக்தியாகும் (Motivation). இப்படிப்பட்ட பிள்ளைகள்தாம் பெரும்பாலும் ‘எண்ணிய எண்ணியாங்கு எய்துவார்கள்’ வாழ்க்கையில் சாதிப்பார்கள் வெற்றி முகட்டை எட்டிப் பிடிப்பார்கள்.

## உலகை எதிர்கொள்ள, பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்

பிள்ளைகள் எப்பொழுதும் உங்களையே எல்லாவற்றிற்கும் எதிர்பார்க்கும் நிலையை ஏற்படுத்தாதீர்கள். ஏனென்றால் நீங்கள் எப்பொழுதும் உங்களுடைய பிள்ளைகளுடனே இருக்கப்போவதில்லை. வயது வளர வளர அவர்களாகவே இவ்வுலக வாழ்க்கையை எதிர்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துங்கள்.

பிள்ளைகள், உங்களை விட்டு மாணவர் விடுதியில் தங்கிப் படிக்கும் நிலை ஏற்படலாம்; அல்லது வேலையினிமித்தமாக வெளியூரிலோ வெளி நாட்டிலோ தங்கவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். ஒரு வேளை உங்களுக்குக் கர்த்தருடைய அழைப்பு வந்து நிரந்தரமாக அவர்களை விட்டுப் பிரியும் நிலையும் எழலாம். அப்பொழுது வாழ்க்கையில் எழும் பிரச்சனைகளை அவர்களே எதிர் கொள்ள வேண்டியதிருக்கும். அவர்கள் இந்தச் சந்தர்ப்பங்களுக்கு ஆயத்தமாக இல்லையென்றால், வாழ்க்கை அவர்களுக்குச் சுமக்க இயலாத பாரமாகிவிடும். சிலர் உலக வாழ்க்கையை வெறுத்து விபரீத முடிவை நாடுவார்கள்.

## கஷ்டத்தை எதிர்கொள்ள அனுமதியுங்கள் - கற்றுக்கொடுங்கள்

'வாழ்க்கை கடினமானதுதான், ஆனால் இறைவன் நல்லவர்'. (Life is hard, but God is good).

'வாழ்க்கையில் அநீதிகள் நிகழலாம். ஆனாலும் இறைவன் அனைத்தின்மேலும் அதிகாரமுள்ளவர்' என்பதைப் புரியவையுங்கள் (Life is unjust, but God is sovereign). வெறுக்கப்பட்டார்; சிறையில் அடைக்கப்பட்டார்; ஆனால் சோதனைகளை வென்று சாதனைபடைத்தார். அடிமையாக இருந்த அதே எகிப்தில் அரசனுக்கடுத்த அதிகாரியானார். (ஆதியாகமம் அதிகாரங்கள் 37 முதல் 50 வரை, பிள்ளைகளை வாசிக்கச் சொல்லுங்கள்).

இந்த உலகில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் பாடுகளுண்டு என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும். 'இதற்காக (பாடுபடுவதற்காக) நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டுத் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்' (1பேதுரு. 2:21) என்று திருமறை கூறுகிறது.

பிரபல இரஷ்ய எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய், 'நம்பிக்கையே வாழ்க்கை' என்று கூறினார். இந்த உலகை எதிர்கொள்ள, ஒரு மனிதனுக்குத் தன்னம்பிக்கையும் வேண்டும். இறை நம்பிக்கையும் வேண்டும் என்பதை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள் (To live a fulfilled life on this earth, a man should have self-confidence and God-faith). 'யானை சாதிப்பது தும்பிக்கையினால் மனிதன் சாதிப்பது நம்பிக்கையினால்' என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்.

இவைகளிலிருந்து பிள்ளைகள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமென்ன?

வாழ்க்கையில் கஷ்டம் (துன்பம்) என்பது எல்லோரும் அனுபவிப்பது தான்; 'வாழ்க்கையில் நான் மட்டும்தான் துன்பப்படுகிறேன் என்றோ அல்லது நான் கஷ்டங்களுக்கு விதிவிலக்கானவன் என்றோ' கருதுவது தவறான கண்ணோட்டம் என்பதைப் பிள்ளைகள் உணர்ந்திருக்க வேண்டும்.



# சபை மிஷனெரி சங்கம் (C.M.S)

## மற்றுமோர் ஆங்கிலிக்கன் சங்கம்

L.M.S.உருவாகி நான்காண்டுகளே ஆயின. 1779-இல் இலண்டன் மாநகரில் 16 ஆங்கிலிக்கன் ஆயர்களும் ஒன்பது சபை அங்கத்தினர்களும் ஒன்று கூடினர். அயல் நாடுகளில் நடைபெறும் அருட்பணியில் ஆர்வம் காட்டினர். அருட்பணி செய்யும் முறைகளைக் குறித்து விவாதிக்கக் கூடினர். இவர்கள் S.P.C.K., S.P.G. ஆகிய சங்கங்களுக்கு உதவிடும் வகையில் மாத சந்தா செலுத்தினர். இவர்களில் பெரும்பாலோர் திருமறை அடிப்படைக் கோட்பாடு (Evangelical) உடையவர். இவர்கள் தனி நபர் மனமாற்றத்தையும், இரட்சிப்பையும் வலியுறுத்தினர். மெதடிஸ்ட் திருச்சபையில் இருந்த அதே ஆர்வம் இவர்களிடையிலும் இருந்தது. ஆயினும் இவர்கள் ஆங்கிலிக்கன் திருச்சபை அங்கத்தினர்களாகவே இருக்க விரும்பினர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் புதுப் புது கடற் பயணங்களை மேற்கொண்டனர். புதியன கண்டுபிடிக்கப்பட்டன. உலகைப்பற்றிய உண்மைகள் பலவற்றை அறியலாயினர். அமெரிக்கக் குடியேற்றங்களிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் அதிகக் கவனம் S.P.C.K., S.P.G. செலுத்தினர் என இக்குழுவினர் நினைத்தனர். இவர்கள் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் உள்ள மக்களிடையே நற்செய்தியை அறிவிக்க விரும்பிப் புதியதோர் ஆங்கிலிக்கன் மிஷனெரி சங்கத்தைத் தொடங்கினர். ஆங்கிலிக்கன் திருச்சபையின் ஆளுகைக்கு உட்பட்டிராமல் இது சுயமாகச் செயல்படும் சங்கமாக அமைந்திருந்தது. ஆங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர்களின் ஆதரவு இல்லாத காரணத்தால், அருட்பணிக்குத் தேவையான பணத்தைத்

தாங்களே சேகரிக்க வேண்டியதாயிற்று. எனவே மிஷனெரிமாரைத் தேர்வு செய்வதிலும், பணித்தளங்களை நிர்வகிப்பதிலும் முழுமையான சுதந்திரமிருந்தது. இச்சங்கம் ‘ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கத்திய நாடுகளுக்கான சபை மிஷனெரி சங்கம்’ என்றும் அல்லது சி.வி.ஷி. என்றும் பெயர் பெறலாயிற்று.

இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட சிறிது காலத்திற்குள், பள்ளிகளில் பணியாற்றிட, ஊழியர்களை அனுப்ப இயலுமா எனத் தரங்கம்பாடியைச் சேர்ந்த அறிவர் ஜான் சங்கச் செயலாளருக்குக் கடிதம் எழுதினார். இத்தகைய பணியை மேற்கொள்ள ஏற்ற ஊழியர்கள் இங்கிலாந்தில் கிடைக்காத காரணத்தால் ஜெர்மனியிலிருந்த மிஷனெரி பயிற்சிக் கல்லூரிக்கு வேண்டுகோள் விடுத்தது. C.T.E. ரேனியஸ் (Rhenius), J.C. ஷ்னர் (Schnarre) என்ற லூத்தரன் மாணவர்கள் இந்த வேண்டுகோளைக் கேள்விப்பட்டபோது, கடவுள் தங்களை இந்தியாவில் பணியாற்ற அழைப்பதாக உணர்ந்தனர். இவ்விருவரில் ரேனியஸ் ஆற்றல் மிக்கவர். தென்னிந்தியாவில் ஆங்கிலிக்கன் திருச்சபை வளர்ச்சியடைவதற்கு இவரே முக்கிய காரணம் ஆவர்.

## ரேனியஸ் குடும்பம்

அட்டோ ரேனியஸ் என்பவர் பிரஷ்ய (ஜெர்மனி) இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றியவர். இவர் தமது குடும்பத்துடன் ஒரு கோட்டையில் குடியிருந்தார். இவருடைய இரண்டாவது மகன் சார்லஸ் 1790ல் பிறந்தார். மேலும் ஒரு மகனும் ஒரு மகளும் இங்குப் பிறந்தனர். அதன் பிறகு இவரது குடும்பத்தில் பெரும் இழப்புகள் ஏற்பட்டன. சார்லஸ் ஆறு வயது சிறுவனாக இருந்தபோது. இவரது தகப்பனார் மரணமடைந்தார். நான்கு பிள்ளைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு தாயின்மீது விழுந்தது. சார்லசுக்கு 14 வயதானபோது பள்ளியிலிருந்து நின்று, தமது சிற்றப்பாவின் அலுவலகத்தில் வேலை செய்தார். மூன்றாண்டுக் காலம் அங்கு வேலை செய்தபின் அந்நிலையில் பெரும் நிலக்கிழாரான பெரிய தந்தை சார்லசை, தம் வீட்டில் வந்து தங்குமாறு கேட்டுக்கொண்டார். அவருக்குப் பிள்ளைகள் இல்லாததால் தமது சொத்துக்களுக்குச் சார்லசை வாரிசாக்கத் திட்டமிட்டிருந்தார்.

சார்லஸ் பெரிய தந்தையும் பெரிய தாயாரும் இவர்மீது அதிக அன்பாயும் பட்சமாயும் இருந்தனர். அவர்களுடன் தங்கியிருந்த நாட்களில் ஆழ்ந்த ஆன்மிக அனுபவங்களைப் பெற்றார். இயேசு ஒரு மாமனிதர் என்று நம்பினார். ஆனால் அவரைக் கடவுளென்று எவ்வாறு நம்புவது என்னும்

மனப் போராட்டத்திற்குள்ளானார். இறைவனிடம் வேண்டுதல் செய்தார்; ஆழ்ந்து சிந்தனை செய்தார். இறுதியாக இயேசு ஒரு முழுமையான மனிதரென்றும், கடவுள் என்றும் நம்பினார். மனம் சாந்தியடைந்தது. இயேசுவை இன்னாரென்று அறிந்து கொண்ட சார்லஸ், கடவுள் சித்தத்தைச் செய்யாமலிருப்பதெங்ஙனம்? என்ன நேர்வதாயினும் அவர் பணிக்கே தம்மை அர்ப்பணிக்க உறுதிபூண்டார்.

## குடும்பத்தைவிட கடவுளே மேலானவர்

இவரது பெரியப்பாவின் இல்லத்தில் மிஷனெரி சங்க வெளியீடுகள் பல இருந்தன. சார்லஸ் அவற்றை ஊன்றிப் படிப்பார். இவற்றைப் படிக்கும்போதெல்லாம் கடவுள் தம்மைக் கடல் கடந்து சென்று அருட்பணி செய்ய அழைப்பதாக உணர்ந்தார். அவருடைய பெரிய தந்தையார் இதை விரும்பவில்லை. இருப்பினும் இறுதியில் அவர் விருப்பத்திற்கிணங்கினார். பெரியம்மா அவர் மனதை மாற்ற முயன்றார். அன்பைப் பொழியும் குடும்பத்தை அவர் எவ்வாறு பிரிந்து செல்ல முடியும்? செல்வமிக்க நிலக்கிழாராகச் சொகுசாக வாழ்வதை உதறித்தள்ளுவது விவேகமா? பெரும் மனப்போராட்டம்; கடுமையான சோதனை ஏற்பட்டது. 'எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றலுண்டு', 'என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்' போன்ற திருமறை வாக்கியங்கள் (பிலி. 4:13, மத். 10:37) மூலம் கடவுள் இவரோடு பேசினார். இவரும் தெளிவு பெற்றார்.

சார்லஸ் பெர்லின் நகரிலுள்ள மிஷனெரி கல்லூரிக்கு இறையியல் கற்கச் சென்றார். கல்லூரிக்குச் செல்லும்போது தமது உள்ளக்கிடக்கையைக் குடும்பத்தாருக்குத் தெரிவிக்க அஞ்சினார். தாய் தன் சேயின் உணர்வுகளை அறியாமலிருப்பாளோ? தமது மகன் மிஷனெரியாகச் செல்லக்கூடும் என்று சந்தேகப்பட்ட தாயார் மகனே அயல்நாடுகட்கு மட்டும் செல்லாதே என்று உருக்கமாய் வேண்டிக்கொண்டார். 'அன்பு வடிவான அருமைத் தாயே, கடவுள் எனக்கு அவ்வாறு கட்டளையிடுவாராயின் நான் என்ன செய்வேன்?' என மறுமொழி பகர்ந்தார்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

லேவியராகமம்

அன்புக்குரியவர்களே இந்த மாதத்திற்கான வினாக்கள் லேவியராகமம் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள, இதற்கான பதில்களை இந்த மாதம் 15 ஆம் தேதிக்குள் ஆயருக்கு tamilchurchcsisharjah@gmail.com என்னும் மின்னஞ்சல் வழியாகவும் அல்லது 0507032150 Whatsapp வழியாகவும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. பலிபீடத்தின் மேலிருக்கிற அக்கினி ____________ எரிந்து கொண்டிருக்க வேண்டும் ?
2. எதற்கு இரத்தம் பாவநிவிர்த்தி செய்கிறது ?
3. தன்தன் ____________ தன்தன் ____________ பயந்திருக்கவேண்டும் ?
4. உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக, நான் யார்?
5. அபிஷகம் பெற்ற யார் இரத்ததில் கொஞ்சம் எடுத்து வரவேண்டும் ?
6. நீ உன் சந்ததியில் யாரையாகிலும் ____________தீக்கடக்கும்படி இடங்கொடாதே ?
7. யாரை நிந்தியாமல், யாருக்கு முன்னே தடுக்கலை வைக்ககூடாது ?
8. தேசம் யாருடையது ?
9. பாவநிவாரணநாளில் எது தொனிக்கும் ?
10. எது பலனையும், எது கனியையும் கொடுக்கும் ?
11. யாருக்குள் கோள் சொல்லித் திரியாதே?
12. ____________ இருக்கும் இடத்தில் எது வெளுக்கும் ?
13. வயலில் எந்த விதைகள் விதைக்க கூடாது ?
14. யாருக்காக எதை கீறிக்கொள்ளகூடாது?
15. எந்த வருசத்தில் எதன் கிளைகழிக்க கூடாது ?
16. யாருடைய காவலைக் காக்க வேண்டும் ?
17. எதன் கொழுப்பை புசிக்கிறவன் அறுப்புண்டு போவான் ?
18. ஆசாரியன் எதை தண்ணீரினால் கழுவவேண்டும் ?
19. சமபாகம் யாருடையது ?
20. மொட்டைதலையில் எது உண்டானால் குஷ்டம் ?

## கடந்த மாத வினாக்களுக்கான பதில்கள்

1. பித்தோம், ராம்சேஸ் (1:11 )
2. சிப்பிராள், பூவாள் (1 : 15)
3. மோசே (2 : 21)
4. கெர்சோம் (2 : 22)
5. மாசா, மேரிபா. (11: 7)
6. மூன்று நாள் (5 : 3)
7. ஆறு இலட்சம் (12: 37 )
8. ஏத்தாமில் (13 : 20)
9. அறுநூறு (14: 7)
10. மிரியாம் ( 15 : 20)
11. மன்னா (16 : 31 )
12. தண்ணீர் (17 : 1)
13. கர்த்தர் இறங்கினபடியால் (19 : 16 18)
14. தேவன் (20 : 19)
15. நாய்களுக்கு (22:31)
16. யோசுவா ( 24 : 13)
17. சீத்திம் (30 : 1)
18. சேர்ப்புக்கால பண்டிகையை (34 : 22)
19. சீத்திம்
20. சதரமும் இரட்டையுமாய்ச் செய்து, ஒரு ஜாண் நீளமும் ஒரு ஜாண் அகலமுமாக்கி. (39 : 9)

கடந்த அக்டோபர் மாதம் கேள்விகளுக்குப் பதிலளித்த அனைவருக்கும் பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Punitha Arul
2. Dr.Jone Bino
3. Mrs.Florence Anantharaj
4. Mrs.Kavitha Johnson
5. Mrs.Esther Kala Ashok
6. Mrs.Kavitha Rasu
7. Mrs.Baby Jesudass
8. Mrs.Veni Winston
9. Ms.Kavitha John Helen
10. Mrs.Ahiya
11. Ms.V.Selina Stephen
12. Mrs.Stella

**Children's Corner - Colouring**

1. Sarah
2. Jefin
3. Jafan
4. S.Sanhedrin

# The God Who Grants Goodness

Have you ever looked around and noticed how many good things you have? The sunshine, your family, tasty food, friends who care, and even your laughter-all these remind us of one special truth: God is good! Our God loves to give good things to His children. Let's learn about our God who grants goodness through three beautiful truths from the Bible.

## God's Goodness Never Ends



"Give thanks to the Lord, for He is good; His love endures forever." - Psalm 107:1

God's goodness isn't just for one day - it's forever! Even when things don't go as we expect, God's love stays the same. When we wake up in the morning, when we go to school, or even when we're sad or afraid, God is still good. Every sunrise is a reminder that His kindness never runs out

## God Gives Good Gifts to His Children




"Every good and perfect gift is from above, coming down from the Father of lights." - James 1:17

Think about all the good things you have - your talents, your favorite meals, your cozy bed, and even your pets! Every one of them is a gift from God. He loves blessing His children with what's best for them.When we thank God each day, we are remembering that every blessing comes from His loving hands.

## God Wants Us to Share His Goodness



"Do not forget to do good and to share with others, for with such sacrifices God is pleased." - Hebrews 13:16 God doesn't want us to keep all the goodness to ourselves. He wants us to share His love with others - by helping, being kind, forgiving, and praying for people.When we show goodness to others, we become little lights shining God's love in the world!

## Let's Remember:

God's goodness is not just something we receive - it's something we can live and share every day. Let's be thankful and trust that our Heavenly Father always gives what is good, because He is good all the time!

**Memory Verse :**

"The Lord is good to all; He Has Compasion on all he has made." - Psalm 145:9

# Coloring Page




Contributed By
**Sathish Rajkumar**

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this Month.
+971 50 703 2150

# Birthday & Wedding day Celebrants

**1st Nov**
MASTER. CYRIL HARRIS SATHIYA
MASTER. A. JOSEPH ILAMARAN

**2nd Nov**
MRS. RUBY JOHN MARKCUS

**3rd Nov**
MRS. SYLVIA SEKAR
MRS. LAVEENA HILMA JOYCE

**4th Nov**
MR. KOIL PITCHAI SAMUEL C.

**5th Nov**
MISS. EVANIYA SHERIN

**6th Nov**
MISS. RACHEAL BENINA P.
MR. WILLIAMS PRABHAKARAN
MRS. PREETHI

**7th Nov**
MISS. HEPZIBAH GNANA DEBAM K.
MRS. MARYJAH BEAULH D
MR. THANGA BABU
MR. JOHN RABINDRANATH PAULRAJ

**10th Nov**
MRS. CATHERIN

**12th Nov**
MR. STALIN JOSE. Y
MASTER. V.J.ETHAN FELXIRAJ

**13th Nov**
MRS. BENISHA CHRISTABEL
MR. SANTHA KUMAR SELVARAJ

**14th Nov**
MASTER. ABISHEK JESHURUN BROWN
MRS. NAJIMA VIJI K.
MISS. ACHSAH DAVINA

**15th Nov**
MRS. JANI VICTORIA
MASTER. VASANTH VIJAYANAND
MISS. JENIFER KEREN
MISS. JEROLIN AGNES
MISS. DELIAHAM SHINEY
MR. S.SELVIN

**17th Nov**
MISS. NEOLA CHRISTINE AUGUSTINE

**18th Nov**
MISS. JENNIFAR ELCY K.
MASTER. JERVISH CLAUDIAN

**19th Nov**
MR. EBENEZER JACOB V.
MASTER. JEREMIAH BENHAIL SAMUEL

**21th Nov**
MR. DANIEL FRANK RAJKUMAR.T
MR. JOSH ASHWINE

**22th Nov**
MASTER. SHANE DANIEL

**23th Nov**
MISS. DAFINA DINESH

**27th Nov**
MR. THOMAS PAUL RAJ.P

**28th Nov**
MRS. KAVITHA S.

## Wedding Anniversary

**5th Nov**
MR. PHILIP MOSES & MRS. DIVYA ANGELINE PHILIP

**8th Nov**
MR. NELSON RAO J.

**9th Nov**
MR. SARAVANA KUMAR & MRS. VEERANI
MR. JESUDASAN RAJIAH & MRS. RITA JABA VASITAI

**10th Nov**
MR. NIRMAL RAJKUMAR & MRS. ANU BEULAH BERNICE.D

**12th Nov**
MR. S.JOHNSON & MRS. KAVITHA

**15th Nov**
MR. LAVIN RAJ & MRS. VANITHA

**16th Nov**
MR. J. JOHIN IMMANUEL & MRS. K. HELINATH PAULINE

**18th Nov**
MR. SUJIN D. & MRS. PRIYA CHRISTOBEL SUJIN

**19th Nov**
MR. SUNILKUMAR K. & MRS. VIJILA S.

**22th Nov**
MR. FELIX RAJA SINGH & MRS. S.BABY

# DAILY BIBLE READING NOVEMBER 2025

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 Sat | சங்கீதம் 52 | லேவியராகமம் 1 : 1 -17 |
| 02 Sun | மத்தேயு 5 : 38-48 | லேவியராகமம் 2 : 1-16 |
| 03 Mon | 1 சாமுவேல் 24 : 1-12 | லேவியராகமம் 3 : 1-17 |
| 04 Tue | யாத்திராகமம் 2 : 1-10 | லேவியராகமம் 4 : 1-35 |
| 05 Wed | எபேசியர் 6 : 1-4 | லேவியராகமம் 5 : 1 -13 |
| 06 Thu | வெளிப்படுத்தல் 22 : 1-21 | லேவியராகமம் 5 : 14-19 |
| 07 Fri | லேவியராகமம் 23 : 23-39 | லேவியராகமம் 6 : 1-13 |
| 08 Sat | சங்கீதம் 85 | லேவியராகமம் 6 : 14-30 |
| 09 Sun | மாற்கு 12 : 41-44 | லேவியராகமம் 7 : 1-10 |
| 10 Mon | உபாகமம் 26 : 1- 15 | லேவியராகமம் 7 : 11-38 |
| 11 Tue | ரோமர் 12 : 14-21 | லேவியராகமம் 8 : 1-36 |
| 12 Wed | 2 தெசலோனிக்கேயர் 2 : 13-17 | லேவியராகமம் 9 : 1-24 |
| 13 Thu | தீத்து 3 : 1-7 | லேவியராகமம் 10 : 1-20 |
| 14 Fri | லேவியராகமம் 24 : 1-23 | லேவியராகமம் 11 : 1-23 |
| 15 Sat | சங்கீதம் 71 : 1-12 | லேவியராகமம் 11 : 24-47 |
| 16 Sun | மாற்கு 5 : 35-43 | லேவியராகமம் 12 : 1-8 |
| 17 Mon | எண்ணாகமம் 27 : 1-11 | லேவியராகமம் 13 : 1-28 |
| 18 Tue | 2 கொரிந்தியர் 9 : 7-15 | லேவியராகமம் 13 : 29-59 |
| 19 Wed | எபிரேயர் 4 : 12-16 | லேவியராகமம் 14 : 1-32 |
| 20 Thu | கொலோசியர் 3 : 1-17 | லேவியராகமம் 14 : 33-57 |
| 21 Fri | லேவியராகமம் 23 : 23-39 | லேவியராகமம் 15 : 1-33 |
| 22 Sat | சங்கீதம் 119 : 9-16 | லேவியராகமம் 16 : 1-19 |
| 23 Sun | லூக்கா 1 : 57-66 | லேவியராகமம் 16 : 20-34 |
| 24 Mon | நியாயாதிபதிகள் 13 : 1-14 | லேவியராகமம் 17 : 1-16 |
| 25 Tue | அப்போஸ்தலர் 21: 7-14 | லேவியராகமம் 18 : 1-30 |
| 26 Wed | 1 யோவான் 4 : 13-21 | லேவியராகமம் 19 : 1-37 |
| 27 Thu | அப்போஸ்தலர் 16 : 1-10 | லேவியராகமம் 20 : 1-27 |
| 28 Fri | லேவியராகமம் 24 : 1-23 | லேவியராகமம் 21 : 1-24 |
| 29 Sat | சங்கீதம் 30 | லேவியராகமம் 22 : 1-33 |
| 30 Sun | லூக்கா 1 : 46-59 | லேவியராகமம் 23 : 1-22 |

# ஆராதனை தியானப் பொருள்

## நவம்பர்- 2025

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>Nov-2<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | 1 சாமுவேல் 24 : 1-12<br>ரோமர் 12 : 14-21<br>சங்கீதம் 52<br>மத்தேயு 5 : 38-48 | வன்முறை சூழலில் அமைதி<br>Peace in the Context of Violence |
| ஞாயிறு<br>Nov-9<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | உபாகமம் 26 : 1-15<br>2 கொரிந்தியர் 9 : 7-15<br>சங்கீதம் 85<br>மாற்கு 12 : 41-44 | அறுப்புக்கால தோத்திரப் பண்டிகை<br>Harvest Festival<br>"நன்மையானதைத் தரும் ஆண்டவர்" |
| ஞாயிறு<br>Nov-16<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | எண்ணாகமம் 27:1-11<br>அப்போஸ்தலர் 21:7-14<br>சங்கீதம் 71 : 1-12<br>மாற்கு 5 : 35-43 | Sunday for the Girl Child<br>பெண் குழந்தையின் மதிப்பை உறுதிசெய்தல்<br>Affirming the Worth of the Girl Child |
| ஞாயிறு<br>Nov-23<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | நியாயாதிபதிகள் 13 : 1-14<br>எபேசியர் 6 : 1-4<br>சங்கீதம் 119 : 9-16<br>லூக்கா 1 : 57-66 | Junior Church Sunday<br>இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?<br>What this Child is Going to be ? |
| ஞாயிறு<br>Nov-30<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 2 : 1-10<br>2 தெசலோ 2 : 13-17<br>சங்கீதம் 30<br>லூக்கா 1 : 46-59 | திருவருகை ஞாயிறு<br>Advent Sunday<br>இறையருள் : தாழ்த்தப்பட்டோருக்கான நம்பிக்கை ( மரியா, எலிசபெத் சந்தித்தல்)<br>Grace of God : The Hope for the Lowly<br>(Meeting of Mary with Elizabeth) |

